**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**<u>OS.NO.22/2022</u>**

Name : மூர்த்தி

Father/Husband Name : பெருமாள்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 22.02.2024.

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

23.9.2021-ல் அந்த தேதியில் மட்டுந்தான் நான் வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ8 அனுப்பினேனா என்றால் அதற்கு முன்பும் அனுப்பியுள்ளேன். வா.சா.ஆ1-ல் புளூ இங்க் மற்றும் கருப்பு இங்க் கொண்டு எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். லிங்கமுத்து என்பவரின் கையெழுத்து ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் வரவு வைத்ததாக உள்ள மேற்குறிப்பு கீழும் மேலும் ஆக எழுதப்பட்டள்ளது என்றால் அவர்களின் வசதிக்கு எழுதியுள்ளார்கள். அதை வரவு மேற்குறிப்பு யார் எழுதினார்கள் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை. அவ்வாறு வரவு மேற்குறிப்பு எழுதியவர்அவருடைய கையெழுத்தை போட்டுள்ளாரா என்றால்' இல்லை. வரவு வைத்தது கருப்பு மையிலும், கையெழுத்து புளூ கலர் மையிலும் போடபட்டுள்ளது என்றால் சரிதான்.

சாட்சி கையெழுத்தை நான் எங்கு சென்று வாங்கிவந்தேன் என்றால் குடியாத்தம். ஸ்டேட் பாங்க் எதிரில் கார்த்திக் டூவீலர் மெக்கானிக் கடை உள்ளது அது பக்கத்திலேயே உள்ள ஜெராக்ஸ் கடையில் படிகட்டுபோல் இருக்கும் அந்த இடத்தில் வைத்து ரவிக்குமார், சீனிவாசன் ஆகியோர்களிடம் கையெழுத்து வாங்கி முதல் புதுப்பித்தல் செய்யப்பட்டது. அவ்வாறு எத்தனை கையெழுத்து வாங்கினேன் என்றால் 5 கையெழுத்து. அது தவிர வேறு எந்த கையெழுத்தும் வாங்கவில்லையா என்றால் முதல் புதுப்பித்தலுக்கு மொத்தம் 9 கையெழுத்து வாங்கினேன் அதாவது முதல் பாண்டுக்கு ஒருவர் என்று 5 பாண்டு 5 கையெழுத்து, பிறகு 4 பாண்டிற்கு 4 கையெழுத்து அவை அனைத்தும் ஒரே தேதியில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். அந்த வரவு வைத்தது ஒரே கலர் மையில் தான் எழுதப்பட்டதா என்றால் அது ஒரே மையினால் தான் எழுதப்பட்டதா என்று நான் சரியாக கவனிக்கவில்லை.

அதை யார் வரவு வைத்து எழுதினார்கள் என்று தெரியாது என்றால் ஞாபகமில்லை. வரவு வைத்து எழுதியவர்கள் கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். மனோகரிடம் நான் தான் போய் கையெழுத்து வாங்கினேனா என்றால் அந்த ஜெராக்ஸ் கடை அனைவரும் ஒன்று கூடும் இடம் அங்கு வைத்து தான் வாங்கினேன். பாண்டின் பின்பகுதியில் மேற்குறிப்பு உள்ள பக்கத்தை காண்பித்து இவைகளில் ஒரே நேரத்தில் தான் வாங்கப்பட்டதா

என்றால் ஒவ்வொரு தேதிக்கும் சாட்சிகள் வந்து ஒரு நேரத்தில் தான் போட்டார்கள். வா.சா.ஆ1-ஐ நாங்கள் வேறு வேறு மையினால் எழுதி வழக்கிற்காக நாங்கள் தயார் செய்துகொண்டோம என்றால் சரியல்ல.

வா.சா.ஆ1 முதல் பக்கத்தில் லிங்கமுத்து என்பவரின் கையெழுத்து ஆங்கிலத்திலும், அதன் மறு பக்கத்தில் லங்கமுத்துவின் கையெழுத்த தமிழிலும் உள்ளது என்றால் அவர் கையெழுத்து போடும் போது பார்த்தேன் இதை கவனிக்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக 21வருடம் 12ம் மாதம் இந்த பணத்தை கொடுத்தேன். அந்த புகார் காவல்கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் பொய்யானது என்றால் சரியல்ல. இருவரும் விசாரணைக்கு அழைக்கப்பட்டு அங்கு பேச்சு வார்த்தை நடத்தி இருவரும் எழுதிகொடுத்து வந்துவிட்டோம். இந்த சொத்தை ஏமாற்றும் நோக்கத்துடன் இந்த பாண்டை தயார் செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு 23.9.2021ல் மட்டுந்தான் வழக்கறிஞர் மூலம அறிவிப்பு அனுப்பினேன் என்றாசரியல்ல அதற்கு முன்பும் நான் அனுப்பிருக்கிறேன். 23.9.2021-ல் அனுப்பிய அறிவிப்பிற்கு 25.9.2021 தேதியிட்ட அஞ்சல் ஒப்புகை அட்டை 2 மட்டுந்தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அதற்கு முன்பு அனுப்பியதற்றாகன ஆதாரம் என்வசம் உள்ளது. நான் அந்த ஆதாரங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் அது என் வழக்கறிஞரிடம் தான் கேட்கவேண்டும். இந்த வழக்கு 2017-ல் வரவு வைத்தது பற்றி இந்த வழக்கில் எதுவும் சொல்லவில்லை என்றாலும், என் வழக்கறிஞர் அறிவிப்பில் எதுவும் சொல்லவில்லை என்றாலும், அது காலதோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,

வேலூர்.